பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி25 செவ்வாய்க்கிழமை (10.09.2002) தொலைபேசி 3378 ஒலி 265

## பலத்த பாதுகாப்பின் மத்தியில்

# தாய்லாந்தின் கடற்படைத்தளத்தில்

# அரசு – விடுதலைப்புலிகள் பேச்சு

## நிகழ்ச்சி நிரல் நேற்று வெளியானது

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே எதிர்வரும் 16ம் திகதி முதல் 18ம் திகதி வரை நடைபெறவுள்ள முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை 4 அமர்வுகளில் சுமார் பன்னிரண்டரை மணித்தியாலங்கள் வரை தாய்லாந்தில் உள்ள சொன்பியுறி மாகாணத்தில் உள்ள சட்டாஹிப் கடற் படைத் தளத்தில் பூட்டிய அறைக்குள் கடுமையான பாதுகாப்பின் மத்தியில் நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தொமஸ் ஸ்ரென் ஹேலண்ட்(TOMAS STANGE LAND) நேற்று வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக இரண்டாவது செயலாளரினால் இந்த நிகழ்ச்சி நிரல் சகல செய்தி நிறுவனங்களிற்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 16ம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள முதற்கட்ட நேரடிப் பேச்சு வார்த்தையின் ஆரம்ப வைபவம் அம்பாசடர் நகரில் உள்ள ஜோன்ரியன் ஹோட்டலில் காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இவ் வைபவத்திற்கு பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## கேணல் ராஜூவின் வித்துடல் பேழை இன்று யாழ். எடுத்து வரப்படும்

### பல்வேறு இடங்களில் அஞ்சலி நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் ராஜூவின் வித்துடல் பேழை மக்கள் அஞ்சலிக்காக வன்னியிலிருந்து குடாநாட்டுக்கு இன்று எடுத்து வரப்படவுள்ளது.

...நாட்டுக்கு எடுத்துவரப்படும் வித்துடல் பேழை கொடிகாமம் சந்தையில் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் காலை 9 மணி முதல் முற்பகல் 10.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கு அஞ்சலி கூட்டமும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரையும். யாழ் இந்துக் கல்லூரியில் பி.பகல் 1.00 மணி தொடக்கம் பி.ப2.00 மணி வரையும், சுன்னாகம்

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஆலோசனையுடன்

# 19வது அரசியல் திருத்தச் சட்டமூலம்

### இன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்காவின் ஆலோசனைகளை உள்ளடக்கிய அரசியற் சட்டத்திற்கான 19வது திருத்தச்சட்ட மூலம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் விசேட அமைச்சரவைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அதிகாரங்களை கட்டுப்படுத்தும் திருத்தச்சட்ட மூலம் புதன்கிழமையன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஒரு தீர்மானமானது, பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் அரைவாசிப் பேரின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஜனாதிபதி

(8ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் முடிந்து கையோடு

## அமைச்சர்கள் அமெ. செல்வர்

(கொழும்பு)

தாய்லாந்தில் ஆரம்பமாகும் அரசு-புலிகள் முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸும், மிலிந்த மொறகொடவும் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில், தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தையின் பலாபலன்கள் குறித்தும் இலங்கையின் அபிவிருத்திக்கு சர்வதேச முதலீட்டைக் கோரியும் அமைச்சர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். (த)

இந்த நிகழ்ச்சி நிரல் சகல செய்தி நிறுவனங்களிற்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்ட நேரடிப் பேச்சு வார்த்தையின் ஆரம்ப வைபவம் அம்பாசடர் நகரில் பத்திரிகையாளர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் ராஜூவின் வித்துடல் பேழை மக்கள் அஞ்சலிக்காக வன்னியிலிருந்து குடாநாட்

வரையும், யாழ் இந்துக் கல்லூரியில் பி.பகல் 1.00 மணி தொடக்கம் பி.ப2.00 மணி வரையும், சுன்னாகம்

(8ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் ஆலோசனையுடன் 19வது அரசியல் திருத்தச் சட்டமூலம்

## இன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்காவின் ஆலோசனைகளை உள்ளடக்கிய அரசியற் சட்டத்திற்கான 19வது திருத்தச்சட்ட மூலம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் விஷேட அமைச்சரவைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அதிகாரங்களை கட்டுப்படுத்தும் திருத்தச்சட்ட மூலம் புதன்கிழமையன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஒரு தீர்மானமானது, பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் அரைவாசிப் பேரின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஜனாதிபதி

(8ம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் முடிந்த கையோடு அமைச்சர்கள் அமெ. செல்வர்

(கொழும்பு)

தாய்லாந்தில் ஆரம்பமாகும் அரசு-புலிகள் முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ்சும், மிலிந்த மொறகொடவும் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில், தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தையின் பலாபலன்கள் குறித்தும் இலங்கையின் அபிவிருத்திக்கு சர்வதேச முதலீட்டைக் கோரியும் அமைச்சர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். (த)

# ஜனநாயக அரசியல் அனுபவத்தைப் பெற இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவது அவசியம்

## சமாதானப் பேரணியில் பிரதமர் உரை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடிய ஓர் அமைப்பு. ஆனால் அவர்கள் தற்போது அரசியலில் ஈடுபட முன்வந்துள்ளனர். தனி நாட்டுக்கோரிக்கையை முன்வைத்துப் போராடிய விடுதலைப்புலிகள் இன்று அரசாங்கத்துடன் அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசுவதற்கு தயாராகவுள்ளனர்.**

இவ்வாறு நேற்று நடந்த சமாதானப் பேரணியில் கூடிநின்ற ஜன சமுத்திரத்தின் மத்தியில் உரையாற்றும் போது பிரதமர் ரணில் தெரிவித்தார்.

அரசும், விடுதலைப்புலிகளும் முன்னெடுத்துவரும் சமாதான முயற்சிகளை வரவேற்று அதற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் நேற்று கொழும்பு மாநகர சபை மைதானத்தில் லட்சக் கணக்கான மக்கள் வந்து கூடினர்.

தலைநகர் கொழும்பில் இருந்து தும்முல்லைச் சந்தி, பொரளைச் சந்தி,ஊறுகொடவத்த சந்தி, சுகதாஸ விளையாட்டரங்கச் சந்தி ஆகிய நான்கு முனைகளில் இருந்து சமாதானத்திற்கான மக்கள எழுச்சிப் பேரணி நேற்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகிப் பல் வேறு சமாதானக்

(8ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற உறுப்பினர் சிலர் கழுதைகளாக மாறிவிட்டனர்

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர் சாடல்

(கொழும்பு)

அரசாங்கமும் ஜனாதிபதியும் இணைந்து செயற்பட்டு அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கு முன் வந்தாலும் அவர்களில் தொங்கிக் கொண்டிருக்கும் ஏவல் ஆட்கள் அதனை தடுத்து வருகின்றனர். நாட்டின் மேம்பாட்டிற்கு உழைப்பதற்கென்று மக்கள் எம்.பிக்களை தெரிவு செய்கின்றனர்.

ஆனால் எம்.பிக்கள் தமது சுயநலன்களை கவனித்துக் கொண்டு பிரதான கடமையை கைவிட்டு விடுகின்றனர். சில எம்பிக்கள் கழுதைகளாகி விடுகின்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இராசி பலன்

10 - 9 - 2002
(ஆவணி 25 செவ்வாய்)
சதுர்த்தி ந இ. 12,00வரை
சித்திரை பி.ப, 3 47 வரை
இர குகாலம் - 3.03- 4 33
நல்லநேரம்- 10.33-12.03
விநாயகர் சதுர்த்தி விரதம்

**மேடம்**
காரிய நன்மை, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ சிந்தை, சுவாரஸ்யம்.

**இடபம்**
உடல்நலம், செய்தொழில் மேன்மை, போசனசுகம், மன மகிழ்ச்சி.

**மிதுனம்**
சகோதரர் உதவி இலட்சுமி கரம், சொத்துக்களாற் கவலை, சிறுவியாதி

**கடகம்**
தாய்வழிஉறவு, மாணவர் கல்விச்சிறப்பு, முயற்சி தாமதம். வியாதி.

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு உறவினர் சந்திப்பு. பிரயாண நன்மை, முயற்சி கைகூடும்.

**கன்னி**
தனவிரயம் காரியதாமதம் சயனசுகக்குறைவு மாதர் நட்பு

**துலாம்**
போசனசுகம், பெரியோர் மதிப்பு, தொழில்லாபம்காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
நிலைமாற்றம், காரிய தாமதம், அமைதிக்குறைவு பொருள் விரயம்

**தனுசு**
நல்ல வரவேற்பு, முயற்சி பலிதம், குடும்ப மகிழ்ச்சி தெய்வ சிந்தை,

**மகரம்**
அதிக பிரயாசை முயற்சி கைகூடும், பிறர் உதவி, நல்ல சம்பவம்,

**கும்பம்**
உடல்சோர்வு, திடீர் பயணம், முயற்சி தாமதம் புதிய சிந்தை.

**மீனம்**
போசனசுகம், உடல்நலக் குறைவு, காரிய தடங்கல், பிரயாண பயம்,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

# சமாதானப் பேச்சுக்களில் ஹக்கீமுக்கு இரு வேடமேன்?

## ஏற்றுக்கொள்ளமுடியாது என்கிறார் பேரியல்

(கொழும்பு)
தாய்லாந்தில் எதிர்வரும் 16ந்திகதி ஆரம்பமாகவுள்ள அரசு புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில்அமைச்சர் ரவூப்ஹக்கீம் முதல் சுற்றில் அரசசார்பிலும் இரண்டாம் சுற்றில் முஸ்லிம் காங்கிரஸ்சார்பிலும் கலந்து கொள்ளவிருப்பது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷரப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருவேடங்களில் அமைச்சர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை முஸ்லிம் மக்களின் சார்பில் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும்.

இதற்கான தீர்வுவிரைவில் காணப்படாது மேலும் குழப்பநிலை நீடிக்குமாயின் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் முஸ்லிம்மக்கள் சார்பில் இப்பேச்சுவார்த்தைகளின் போது பிரதிநிதி ஒருவரை கலந்து கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் முஸ்லிம்மக்களின் நலன்கள் குறித்து எவையும் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களையும் சிங்களமக்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசு மறந்துவிட்டதா என எண்ணத் தோன்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## முக்கிய சந்திப்பு

(தென்மராட்சி)
அறவழி ஆசிரியைகளுக்கான முக்கிய சந்திப்பு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு அறவழி செயலகத்தில் நடைபெறவுள்ளது என குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-77)

## டெங்குக் கட்டுப்பாடு

(மானிப்பாய்)
வலிமேற்கு பிரதேசசபையின் நுளம்புக்கட்டுப்பாடு மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இவ்வாரம் வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன. (உ)

## பரிசில் வழங்கி கௌரவம்

(கொழும்புத்துறை)
பொதுப்பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்த குருநகர்ப்பகுதி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்க குருநகர் பிரான்சிஸ் கல்வி முன்னேற்றக்கழகம் நடவடிக்கைஎடுத்து வருகிறது. (உ-262)

## ஆட்டோ மோதி படுகாயம்

(மந்திகை)
இரவு வேளையில் வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் எதிரே வெளிச்சமின்றி வந்த ஆட்டோ மோதியதில் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் வியாபாரிமூலையைச் சேர்ந்த பி செல்வராசா என்பவரே தலைப் பகுதியில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-23)

## இரண்டாம் கட்ட விசாரணை இன்று

(யாழ்ப்பாணம்)
கடந்த மாதம் 16ம் திகதி நாரந்தனை கள்ளுத்தவறணைக்குள் புகுந்து கடற்படையினர் புரிந்த அடாவடித்தனம் தொடர்பான இரண்டாம் கட்ட விசாரணை இன்று மு ப 10மணியளவில் மனிதவுரிமைகள் ஆணைக்குழு யாழ் அலுவலக அதிகாரி றுவான் சந்திரசேகர முன்னிலையில் இடம் பெறவுள்ளது. (உ 6)

## நிர்வாக அலுவலர் பதவி இல்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நிர்வாகஅலுவலர்என்றபதவி உருவாக்கப்படவில்லை என வடக்கு-கிழக்கு மாகாணஉள்ளூராட்சி கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் சமுகமளிக்காத பட்சத்தில் அல்லது லீவில் சென்றிருந்தால் அவ்வாறான கடமையை செயற்படுததுவது பதவிநிலையைச் சேர்ந்த அலுவலரே (STAFE ASSISTANT) முழுப்பொறுப்பேற்று செய்யவேண்டும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் சிரேஷ்ட தரத்தில்உள்ள ஆய்வு அலுவலர் (I. O) பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கு பதிலாக கடமையாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-252)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் செயற்படும் சகலதுறை சார்ந்த ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும் நிறுவனங்கள்மற்றும் தனியார் அனைவருக்குமான விசேட பொதுக்கூட்டம் ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமைமு.ப. 10 00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக இலங்கை தே. நி. ஒ. சங்க யாழ் பிராந்திய செயலாளர் க. மகாதேவசிவம் அறிவித்துள்ளார். (உ)

## 160 யுவதிகள் வைத்தியசாலையில்

(கொழும்பு)
இரத்மலானை பகுதி ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 160 யுவதிகள் திடீரென நோயுற்ற காரணத்தால் களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தொழிற்சாலை சிற்றுண்டிச்சாலையில் இவர்கள் அனைவரும் உணவு உண்டதை அடுத்தே நோய் வாய்ப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது இது தொடர்பான விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-8

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு உலக முஸ்லிம் லீக் பூரண ஆதரவு

(கொழும்பு)
அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உலகமுஸ்லிம் லீக்தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான தூதுக்குழுவினர் சவுதிஅரேபியாவிலுள்ள உலகமுஸ்லிம் லீக்கின் செயலாளர் கலாநிதி அப்துல்லா அப்துல்மகசீன் அல்துர்க்கியை நேற்று சந்தித்துப்பேச்சுவார்த்தைநடத்தியிருந்தனர்.

இதன் போதேஉலகமுஸ்லிம் லீக் செயலாளர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போதுசவுதிக்கான இலங்கைத் தூதுவர் முகமட் அன்சாரும் கலந்து கொண்டார்.

அதேவேளை சவுதிஅரேபியாவிலுள்ள இலங்கையர்கள் இலங்கையில் சமாதானம் மலர பிரார்த்தனை செய்ய வேண்டும் என அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள்விடுத்தார்.

அமைச்சர்ஹக்கீம் தலைமையிலான குழுவினர் இன்று நாடு திரும்புகின்றனர். (த)

## தீவிபத்தில் கணவன், மனைவி படுகாயம்

(மந்திகை)
மனைவி மீது பற்றிய தீயை அணைக்க முற்பட்ட கணவனும் படுகாயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமையன்று இரவு குப்பி விளக்கு வெடித்ததினால் ஏற்பட்ட இந்த தீவிபத்தில் நவரட்ணம் தயாநிதி (வயது 38 ) என்ற 5 பிள்ளைகளின் தாய் பலத்த எரிகாயங்களுடனும் அவரைக் காப்பாற்ற முனைந்த கணவர் கே.நவரட்ணம் (வயது 42 ) கைகள் எரிந்த நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீசற்பகவிநாயகர் கோவில் அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது. (உ)

## கண்ணிவெடி அகற்றல்

(தென்மராட்சி)
மட்டுவில் வடக்கு பகுதியில் கண்ணிவெடி, மிதிவெடி மற்றும் வெடிபொருட்களை அகற்றி செயலிழக்கும்பணியில் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கண்ணிவெடி மற்றும் வெடிபொருட்களை மானாவளைக் குளத்தருகில் வைத்து வெடிக்கவைத்து வருகின்றனர். (உ-77)

## யூனியன்கல்லூரி இன்றுமுதல் சொந்தஇடத்தில்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இன்றுமுதல் தனது சொந்தஇடத்தில் இயங்கவுள்ளது.

இன்றுகாலை 8.00மணிக்கு சம்பிரதாய பூர்வமாக பாடசாலை ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. (உ)

## ஏ. ஆர். எம்.வி.அமரக்கோன் கல்வியமைச்சின் ஆளாட்சி அதிகாரியாக நியமனம்

(கொழும்பு)
முன்னாள் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. ஆர். எம. வி. அமரக்கோன் கல்வியமைச்சின் ஆளாட்சி அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார்.

இப்பதவியில் இவரை நியமிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே சமர்ப்பிககப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணும் நோக்குடனேயே ஆளாட்சி அதிகாரி நியமிக்கப் படவுள்ளாரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## திட்டமிடலாளர்களுக்கு ஜனாதிபதி புகழாரம்

(கொழும்பு)
இலங்கை திட்டமிடலாளர்கள் சங்கத்தின் 2002 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதனையொட்டி ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்திருந்தார்.

அவ் வாழ்த்துச் செய்தியில், ஆட்சிப்பணியில் கொள்கைத் திட்டமிடல் ஏக முக்கியத்துவம் வாய்ந்த துறையெனவும் இதனை உத்தேசித்து முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1971 இல் இலங்கைத்திட்டமிடல் சேவையாளர்களை மாவட்ட மட்டங்களிலும் நியமித்ததாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கத்தின் கொள்கை வகுப்பிலும் செயற்படுத்துகையிலும் அவர்களின் புலமை கருதிதான் அதிமுக்கிய அமைச்சுக்களின் செயலாளர்களாக அச்சேவையிலுள்ள சிலரை நியமித்ததாகவும் தெரிவித்துள்ளதுடன்,

21 ஆம் நூற்றாண்டிற்கான அரசாங்கத்தின் தூரநோக்கு ஆவணத்தைத் தயாரிப்பதில் திட்டமிடல் சேவையாளர்கள் வகித்த ஒப்புயர்வற்ற பங்கினையும் அவர் பாராட்டியுள்ளார். (உ)

## விஞ்ஞானச் சங்க ஏற்பாட்டில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சி நாளை தொடக்கம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 3 தினங்கள் காலை9.00மணிமுதல்மாலை 4.00 மணி வரை வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது:

இக்கண்காட்சியில் யாழ். பல்கலைக்கழகத்தினர் ஐ.ஐ. எஸ். கணனி நிறுவனத்தினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட முன்னணிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களும் இடம் பெறவுள்ளன. (உ-3)

# இன்று ஒரு தகவல்

## மனிதனுக்கு 6-வது அறிவு

வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு அவஸ்தைப் பட்டு கொண்டிருக்கிற ஒருவர் வந்தார். மனது மிகவும் நொந்து போய் பேசினார் 'இந்த உலகத்தில் மனிதனாகப்பிறந்ததைவிட மாடாகப் பிறந்திருக்கலாம் சார்!' என்றார். 'திடீரென்றுவந்து இப்படிச் சொன்னால் அது எப்படி சார்?' என்றேன். இப்போது தான்சார் அந்த ஞானோதயமே எனக்கு வந்தது என்றார். 'அதற்குஎன்ன காரணம்?' என்றேன். 'என் பையனுக்கு வேலைதேடுகிறேன்... கிடைக்கவில்லை... பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிறேன்... கிடைக்கவில்லை. வீடுகட்டக் கடன்கேட்கிறேன் கிடைக்கவில்லை... மாடாகப் பிறந்திருந்தால் இப்படியான கவலைகள் கிடையாதல்லவா? பேசாமல் வைக்கோலைத் தின்றுகொண்டு அசைபோட்டுக்கொண்டே படுத்திருக்கலாமே!' என்றார்.

அதன்பின்னர்தான் அவர் சொன்ன விஷயத்தை நானும் மனதிற்குள் கொஞ்சம் அசையோடு ஆரம்பித்தேன். இயற்கையைப் பொறுத்தவரையும் அது நாமெல்லாரும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறது. விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்ற உயிரினங்கள்எல்லாம் நல்லபடியாக இருக்கவேண்டும் என்பதுதான் இயற்கையின்விருப்பம். இயற்கைஅமைப்பை உண்மையாகப் புரிந்துகொண்டால் அதுபுரியும்.

இருந்தாலும் இந்த ஆள் சொன்னதை கேட்டதற்குப் பிறகுதான் ஒரு முக்கியமான விஷயம் தெரிந்தது. இந்த உலகத்தில் முக்கியமான ஆறு பிரச்சினைகள்... அந்த ஆறு பிரச்சினைகளும் ஆடு, மாடு, செடி, கொடிகளுக்கு இல்லை! ஆனால் மனிதன் அந்தப்பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டியிருக்கிறது. அந்த ஆறுபிரச்சினைகள் என்னென்ன தெரியுமா? முதலில் 'ஆடு'மாடுகள் நமக்கென்று சொந்தமாக ஒரு வீடு இல்லையே' என்று கவலைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பது இல்லை. ஆனால் மனிதனுக்கு 'வீடு' தேவைப்படுகிறது. இரண்டாவது ஆடைப்பிரச்சினை ஒருகோழி இருக்கிறது. அது என்ன நமக்குப் போட்டுக்கொள்வதற்கு ஒருசட்டை இல்லையென்றா கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்? ஆனால் மனிதனுக்கு அந்தப்பிரச்சினை உண்டு.!

மூன்றாவது கல்விப் பிரச்சினை. ஒரு பசுமாடு கவலையாக நின்று கொண்டிருக்கிறது. நீங்கள் கிட்டப்போய்' ஏன் பசு மாடே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய் என்று கேட்கிறீர்கள் ...' என் கன்றுக் குட்டிக்குப் பாடசாலையில் இடம்கிடைக்கவில்லை .. சையில் டொனேசன் கொடுக்க பணமும் இல்லை. சிபார்சுக்கு யாரைப் பிடிப்பதென்றும் தெரியவில்லை...! என்றா சொல்லிக்கொண்டிருக்கும்? அதற்கு அந்தக் கவலைகள் கிடையாது. ஆனால் மனிதனுக்கு அந்தக்கவலை உண்டு. நாலாவது வேலை வாய்ப்புப் பிரச்சினை: வேலை கிடைக்கவில்லையென்று வேப்பமரம் கவலைப் படுவதில்லை. ஆனால் மனிதன் கவலைப்படுகிறான்.

ஐந்தாவதுகல்யாணப் பிரச்சினை: எருமைமாடுகள், பசுமாடுகள் எல்லாம் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டா அலைகிறது? பத்திரிகையில்விளம்பரமா கொடுக்கிறது? ஆறாவது. பணம் சம்பந்தமான பிரச்சினை ஆடு, மாடுகள்பணத்தைச் சேமிக்க வேண்டுமென்றோ, எதிலேயாவது முதலீடு பண்ண வேண்டுமென்றோ நினைப்பதில்லை. பணத்தை எப்படிக் காப்பாற்றுவது என்கின்ற கவலையும் அவைகளுக்கு இல்லை.

குதிரை குளம்போடு பிறக்கின்றது. காடுமேடெல்லாம் கவலையின்றித் திரியலாம், ஆடு உடம்பில் உரோமத்தோடு பிறக்கின்றது. குளிரைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் மனிதன் மட்டும்தான் ஒன்றுமில்லாமல் பிறக்கின்றான்) ஏன் இந்தப் பாகுபாடு? இதை ஒரு பெரிய வரிடம் கேட்டேன். அவர் இதற்குப் பதில் சொன்னார். எப்படி தெரியுமா? அவர் இதேகேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். அதற்கு இயற்கை சொல்லியதாம்.

'வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவானகருவியை மனிதனுக்கு கொடுத்திருக்கின்றேனே. அந்தக் கருவியை உபயோகப்படுத்தி அந்த ஆறு பிரச்சினைகளை மட்டுமல்ல, ஆறு கோடி பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றைச் சமாளிக்கலாம் அதுதான் ஆறாவது அறிவு. அதை உபயோகப்படுத்தினால் காலுக்கு செருப்புத் தயார் பண்ணிக் கொள்ளலாம். குளிருக்குப் போர்வை தயார் பண்ணிக் கொள்ளலாம். என்னவேண்டுமென்றாலும் செய்யலாம். இவைதான் இயற்கையின் பதில், அதனால் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், இயற்கையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நாம் இப்பொழுது அதை எந்த அளவுக்கு சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோம்? இயற்கையின் படைப்பையே நாம் சரியாகப் புரிந்து கொள்வது இல்லையே! அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்:

நகரிலிருந்து ஒரு ஆள் கிராமத்திற்கு வந்தான், 'ஆகா! எவ்வளவு அழகான பசு... இயற்கையின் படைப்பு, அது சரி! இதற்குகெல்லாம் ஏன் கொம்பு இல்லை?' என்று கேட்டான், அதற்கு அங்கிருந்த இன்னொருவர் பதில் சொன்னார், பசுமாட்டுக்குகொம்பு இல்லாததற்குப் பலகாரணங்கள் உண்டு. கன்றுக் குட்டியாயிருந்ததால் கொம்பு இருக்காது பசுவளர்ந்து பெரிதாக ஆனதின் பின்புதான் கொம்பு முளைக்கும் என்பது ஒரு காரணம். சில சமயம் வளர்கிற கொம்பை எடுத்து விடுவதும் உண்டு. அதுவும் ஒரு காரணம் ஆனால், இதற்கு ஏன் கொம்பு இல்லையென்றால் அதற்குக் காரணம், இது பசு இல்லை! குதிரை!' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குவிசேட கொடுப்பனவு

## வட- கிழக்கில் விரைவில் அமுல்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ச்சியாககடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய ஆசிரியர் இடமாற்றுக் கொள்கையை உரியமுறையில் அமுல் படுத்தும் நோக்கிலேயே இந்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாகமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.என். இஸதீன்தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் உள்ளகஷ்டப் பிரதேசபாடசாலைகளில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்கள் அல்லது கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்ற விரும்பும் ஆசிரியர்களுக்கே வருடாந்த சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக இவ் விசேட கொடுப்பனவை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

எனவே இது தொடர்பான விபரங்களையும் தேவையான நிதியையும் மதிப்பீடு செய்து அறிக்கை அனுப்புமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரைவிடுக்கப்பட்டிருப்பதாகவும்அறியப்படுகிறது. (உ-8)

## ஆவணிச் சதுர்த்தி

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று ஆவணிச் சதுர்த்தித் திருவிழா வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.

★ ★ ★

(அராலி)

ஆவணிச் சதுர்த்தி தினமான இன்று அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, மாலை விநாயகர் வெளிவீதி உலாவும் இடம்பெறவுள்ளது. (உ)

## கும்பாபிஷேகம்

(அராலி)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகாசமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ)

## சிங்கள மொழியில் தமிழ்ச் சொல் அகராதி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் சந்தகோமி கோபரஹவா, திருமதி சரோஜினி தேவி அருணாசலம் ஆகியோரால் தொகுக்கப் பட்ட சிங்கள மொழியில் தமிழ்ச் சொல் அகராதி நீதி சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு புத்தசாசன அமைச்சர் வி.ஜ முலொக்கு பண்டாராவின் ஆதரவில் இன்று இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சபையில அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (க-3)

## போலியோ தடுப்பு மருந்து ஏற்றல்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்உள்ள எல்லா சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவுகளிலும் போலியோ சொட்டு மருந்து சகல ஐந்து வயதுக் குட்பட்ட பிள்ளைகளிற்கும் வழங்குவதற்குரியஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதுதொடர்பாக கொழும்பில்உள்ள சுகாதாரத்திணைக்களத்தின் தொற்றுநோயியல் பிரிவு துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளது.

சகல ஐந்துவயதுக்குட்பட்ட பிள்ளைகளிற்கும் 28-ம் திகதி சனிக்கிழமை 1ம் சுற்றிலும் 26-10-2002 சனிக்கிழமை 2 ம் சுற்றிலும் போலியோ தடுப்பு மருந்துகளை கட்டாயம் வழங்கவேண்டும் எனவும் இதுதொடர்பான மேலதிக விபரங்களை தங்கள்பகுதி குடும்பசுகாதார உத்தியோகத்தர் அல்லது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-252)

## சிறுவர் தினத்தன்று தென்பகுதி மாணவர்கள் சமாதானச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

சிறுவர் தினமான எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தென்பகுதி மாணவர்கள் வடக்கு நோக்கி சமாதானச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

கியூடெக் ஏற்பாட்டில் இங்கு வரும் 75 பேர் கொண்ட இம் மாணவர்கள் சிறுவர் உரிமை தொடர்பான கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் என்பவற்றை நடத்தவுள்ளனர். (உ-6)

## நோர்வேயில் இருந்து 'நொவிப்' ஆலோசகர் இன்று யாழ் வருகிறார்

(தென்மராட்சி)

நோர்வேயின் அபிவிருத்தி உதவி நிறுவனமாகிய 'நொவிப்' பின் ஆலோசகரான டுலான் டி. சில்வா இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இவர் நாளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அபிவிருத்தி நோக்கிய செயல் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலை நடத்தவுள்ளார். (உ-77)

## அரிசி ஆலைகள் இயங்க முடியா நிலையில்

(தென்மராட்சி)

அரசாங்கம் வெளிநாட்டில் இருந்து மலிவான விலையில் அரிசியை இறக்குமதி செய்து வருவதன் காரணமாக நாட்டில் சுமார் 300க்கு மேற்பட்ட அரசி ஆலைகள் பூட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஆலைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

அதேபோல யாழ் குடாநாட்டில் பல இடங்களிலும் இயங்கிய அரிசி ஆலைகள் தொடர்ந்தும் இயங்காமலேயே இருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## பஸ் உரிமையாளர் சங்கம் புலிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தனியார் பஸ் சேவையை ஆரம்பிப்பது குறித்து தனியார் பஸ்உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தனியார் பஸ்சேவையை ஆரம்பிப்பதாயின் அரசாங்கத்தின் மத்தியஸ்தம் தேவை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனி விஜயரத்தின தெரிவித்துள்ளார். (த)

## சர்வதேச நாணய நிதிய தூதுக்குழு உதவிகள் குறித்து ஆராய அடுத்த வாரம் வருகை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவொன்று அடுத்தவாரம்இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கைக்கு எந்தவகையில் உதவி வழங்குவது என்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே இத்தூதுக்குழுவினர் விஜயம்ஒன்றை மேற்கொள்ளவுளளனர்.

இந்நிதிய உயர் அதிகாரி ஜோன்ஹீர் தலைமையில் 5 பேர் அடங்கிய குழுவினரே வருகை தரவுள்ளனர்.

2003 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை நிரப்புவதற்காக சர்வதேச நாணய நிதியம் கணிசமானநிதிஉதவிகளை வழங்கும் என நிதியமைச்சு வட்டாரங்களினால் எதிர்பார்க்கப்படுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களிற்கும் விஜயமொன்றை மேற்கொண்டு சேதமுற்ற பகுதிகளை பார்வையிடவுள்ளனர். (க-8)

## உலக வங்கி உதவியுடன் சாவகச்சேரியில் நீதிமன்றம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன் தினம் வருகை தந்திருந்த நீதி அமைச்சின் செயலர் ஜீ. டபி யு வி.சி. ஜயதிலக சாவகச்சேரிக்கு விஜயம் செய்து சேதமடைந்த நிலையிலுள்ள நீதிமன்றக் கட்டடங்களைப்பார்வையிட்டார்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் சாவகச்சேரியில் புதிய நீதி மன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

# வாஜ்பாய் எடுத்த முடிவை ஏற்க மறுத்தார் ஜெயா

(சென்னை)

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தலைமையில் இடம்பெற்ற காவிரி நதி நீர் அதிகாரசபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஏற்க மறுத்துள்ளார்.

தமிழ் நாட்டிற்கு 0.9 ரி.எம்.சி நீர் வழங்குவதாக பிரதமர் தலைமையில் எடுத்த முடிவை மறுத்த தமிழக முதலமைச்சர் உச்சநீதி மன்ற தீர்ப்பின்படியான 1.25 ரி.எம்.சி நீரைக் காவிரி நதிநீர் ஆணையம் தரவேண்டும் எனவும கோரியுள்ளார்.

இதேவேளை, காவிரி நதிநீர் ஆணையத்தின் இம்முடிவு சட்ட விரோதமானது என்றும் மத்திய அரசு கர்நாடக அரசுக்கு சாதகமான முறையில் இம்முடிவை எடுத்துள்ளது என்றும் தமிழக நில அமைச்சர் பொன்னையன் தெரிவித்துள்ளார்.இதேவேளை தமிழக முதலமைசசருக்கு இக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த போதும் அவர் தனது சார்பில் நிதியமைச்சர் பொன்னையனை அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# பப்புவாநியூகினியில் பாரிய பூமி அதிர்ச்சி

## சேத விபரங்கள் வெளியாகவில்லை

(போட்மோரஸ்பி)

பப்புவாநியூகினி தீவில் நேற்று அதிகாலை பாரியளவிலான பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தீவிங்கரையோர நகரான நலிவாக்கில் இப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

7.5 றிச்சர் அளவில் இப் பூமியதிர்ச்சி பதிவாகி இருந்ததாக அந் நாட்டு புவியியல் ஆய்வு நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பூமியதிர்வினால் ஏற்பட்ட தேசவிபரங்கள குறித்து இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ செய்துளகளும வெளிவரவில்லை

இதேவேளை, இத்தீவில் கடந்த 1998ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் 2ஆயிரம் மக்கள் உயிரிழந் ததும குறிப்பிடத்தக்கது.

### வேவு பார்க்கும் பணியில் ஈடுபட்ட

# அமெரிக்க ஹெலி சிறிய கப்பலுடன் மோதியது

(வாஷிங்டன்)

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான ஹெலிஹெப்டர் ஒன்று அண்மையில் ரஷ்யா நாட்டு சரக்குக் கப்பலுடன் மோதியதில் அமெரிக்க நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அமெரிக்க கடற்படையினர் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

வளைகுடாக் கடலில் யுத்தக் கப்பல்களை தாழப் பறந்து வேவு பார்க்கும் பணியில் அமெரிக்கஹெலிஹொபடர் ஈடுபட்டிருந்த போதே இவ் விபத்து ஏற்பட்டதாக அமெரிக்க படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை ரஷ்யா நாட்டு சரக்கு கப்பலுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. (உ-8)

### பலஸ்தீன காஸாப் பகுதியில்

# மீண்டும் ஓர் முற்றுகைப் போர்

## பாரிய துப்பாக்கிச் சமர் வெடித்தது

(ஜெருசலேம்)

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள காஸாப்பகுதியை நேற்று அதிகாலை இஸ்ரேலியப் படையினர் மீண்டும முற்றுகையிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இரு தரப்பினருக்கும இடையே பாரிய துப்பாக்கி மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இம்முற்றுகைப் போருக்கு இஸ்ரேலியப் படையினர் பெருமளவிலான யுத்த டாங்கிகளைப் பயன்படுத்தியுள்ளதாகவும், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பிரதேசங்களை கடுமையான சோதனைக்கு உட்படுத்தி வருவதாகவும் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# குடியுரிமை கோரி பிரான்ஸிஸ் ஆர்ப்பாட்டம்

### 6ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்பு

(பாரிஸ்)

பிரான்ஸின் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் சுமார் 6ஆயிரத்து 500பேர் சட்டபூர்வ அந்தஸ்து வழங்கக் கோரி கடந்த சனிக்கிழமை தலைநகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஏற்கனவே சட்டபூர்வமான ஆவணங்கள் இல்லாதிருப்போர் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட பேச்சுவார்த்தை காரணமாக, பிரான்ஸின் புதிய மிதவாத வலதுசாரி அரசாங்கம் இவர்களது விண்ணப்பங்களை தனித்தனியாக மறுபரிசீலனை செய்வதாக உறுதியளித்திருந்தது.

நிர்வாக இழுபறிகள் அநாவசிய தாமதங்கள் காரணமாக இதுவரை வதிவிட உரிமை வழங்கப்படாத சுமார் 10ஆயிரம் குடியேற்றவாசிகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று பிரான்ஸ் மனித உரிமைக் குழுக்கள் கோரி வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-08)

### அமர்நாத் யாத்திரை ஆரம்பமானது

(குஜராத்)

பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட அமர்நாத் யாத்திரை நேற்றையதினம் மீண்டும் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோதி தலைமையில் புளோச் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 5 ஆயிரம் கிலோமீற்றர் வரை நடைபெறவுள்ள இவ் யாத்திரை மாநில மக்களிடையே தன்னம்பிக்கையினை ஏற்படுத்தும் என முதலமைச்சர் இவ் யாத்திரை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் கடந்த மாதங்களில் அமர்நாத் யாத்திரிகர்கள் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளமை தெரிந்ததே.

பல நாட்களாக எதிர்பார்த்து வந்த குஜராத் யாத்திரை நேற்றைய தினம் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி தலைமையில் புளோச் எனும் பகுதியில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் யாத்திரையானது 5000 கிலோமீற்றர் வரை நீண்ட ஓர் பயணம் என்றும் இதில் மாநில மக்களிடையே தன்னம்பிக்கை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார். (உ-7,8)

### வீனஸ்ஸை வீழ்த்தி

# வெற்றிவாகை சூடினார் சகோதரி செரீனா வில்லியம்ஸ்

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் இடம்பெற்ற யு.எஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஏற்கனவே சம்பியன் பட்டம் பெற்றிருந்தவரும், தனது சகோதரியுமான வீனஸ் வில்லியம்ஸை வென்று செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் ஓரே ஆண்டில் அடுத்தடுத்து மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமையை ஸ்டெபிகிராபிக்குக் பின்னர் செரீனா வில்லியம்ஸ் பெற்றுள்ளார்.

1997 மற்றும் 1998ம் ஆண்டுகளில் மார்ட்டினா ஹிங்கிஸ் தொடர்ந்து 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களைப பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யு.எஸ்.ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸை 6:4, 6:3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி இந்தப் பட்டத்தை செரனா பெற்றுளளார்.

20 வயதாகும் செரீனா தனது வெற்றி பற்றி கருத்துத தெரிவிக்கையில்,

இந்த நேரத்தில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

கடந்த 1999ம் ஆண்டு இதே பட்டத்தைப் பெற்ற செரீனா தனது சகோதரியான 22வயது வீனஸ் வில்லியம்ஸிடம் பிரெஞ்ச் ஓபன் மற்றும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் தோற்று போனதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஆண்டு நடைபெறும் அவுஸ்ரேலிய ஓபன் போட்டியில் செரீனா சம்பியன் பெறும் பட்சத்தில் ஸ்டெபிகிராபை தொடர்ந்து நான்கு கிராண்ட் ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை பெறும் வீராங்கனை என்ற பெருமையை அடைவார். (உ)



செரீனா வில்லியம்ஸ் வெற்றிக் கிண்ணத்துடன்

### பாராளுமன்ற கூட்டத்தில் நேரடியாக பங்கேற்க

# 12 பலஸ்தீன அரசியல்வாதிகளுக்கு இறுதி நேரத்தில் அனுமதி மறுப்பு

(ரெல்அவீவ்)

பலஸ்தீன பாராளுமன்ற முதலாவது கூட்டத் தொடரில் நேரடியாகப் பங்கேற்க 12 பலஸ்தீன அரசியல் வாதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பலஸ்தீன வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் பாராளுமன்ற கூட்டத் தொடரில் இவ் 12 அங்கத்தவர்களும் தொலைக்காட்சி மூலம் பங்கு பற்றுவார்கள் என தெரிவித்துள்ளன.

இதேவேளை கடந்த இருவருடகாலமாக இஸ்ரேல் விதித்துள்ள இராணுவக் கட்டுப்பாடுகள் வீதித் தடைகள் காரணமாக இப் பலஸ்தீன பாராளுமன்ற உறுப்பினர்கள் அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் மேற்குகரையோரம் மற்றும் காஸா பகுதிகளிலுள்ள அவர்களது வீடுகளுக்கம் பாராளுமன்றத்துக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட தொலைக்காட்சி தொடர்புகள் மூலம் அவர்கள் அதன் நடவடிக்கைகளில் பங்கு பற்றினார்கள்.

86பேர் அங்கம் வகிக்கும் பலஸ்தீன பாராளுமன்றத்தின் இந்த முதலாவது கூட்டத் தொடரில் மேற்படி 12 பேரும் நேரடியாக பங்கேற்க அனுமதி வழங்கப்பட்ட போதும் இறுதி நேரத்தில் மறுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)




# நேபாளத்தில் பதற்றம் தொடர்கிறது

(காத்மண்டு)

நேபாளத்தின் பிரதமர் ஷேக் பகதூர்ஷா தலைமையிலான நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவரை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதால் அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இப் பதற்றத்தைத் தணிப்பதில் அரச இராணுவப் படையினருக்கு சிரமம் ஏற்பட்டு வருவதாக தெரியவருகிறது. (உ-3)

### இந்திய - பாகிஸ்தான் படைகள்

# கார்க்கில் பகுதியில் பரஸ்பரம் குண்டுவீச்சு

(கார்க்கில்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் கார்க்கில் பகுதியில் உள்ள இந்திய ராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் படையினர் நேற்று முன்தினம் இரவு பயங்கரக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் ஒருவர் கொல்லப்பட்டதாக ஸ்ரீநகர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் படைகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்திய ராணுவத்தினர் மோட்டர்க் குண்டுகள் மற்றும் பீரங்கித் தாக்குதலை பதிலடியாக நடத்தினர்.

கார்க்கில்,திராஸ்,பட்டாலிக் உள்ளிட்ட இடங்களில் நேற்றுக் காலையும் இருதரப்பினருக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நீடிப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

நேற்றுக் காலை கார்க்கிலைச் சுற்றியுள்ள மலைப்பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மோட்டார்க் குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதில் அப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றொருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குர்பாடாங் மற்றும் பாரூ கிராமங்களை குறிவைத்து பாகிஸ்தான் படையினர் குண்டு வீச்சில் ஈடுபட்டனர். இப்பகுதியில் விமான நிலையம் மற்றும் வானொலி நிலையக் கோபுரம் என்பன அமைந்தள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

### கண்காணிப்புக்கு குழுவை அனுமதித்து

# அண்டை நாடுகளுக்கான அச்சுறுத்தலை குறைக்க வேண்டும்

### ஈராக்குக்கு ஆலோசனை

(பக்தாத்)

ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் கண்காணிப்புப் பிரிவின் முக்கிய உறுப்பினரான ஹோஸ்பிளிட்ஸ் மீண்டும் பக்தாத் சென்றுள்ளார்.

அங்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், அமெரிக்கா வெளிப்படையாக விமர்சித்துவரும் போர் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாக தெரியவில்லை என்று குறிப்பிட்டார்

ஈராக் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புக் குழுவினரை அனுமதித்து அண்டை நாடுகளுக்கான அச்சுறுத்தலைக் குறைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து மேற்கொளளத் திட்டமிட்டிருக்கும் பாரிய தாக்குதலைத் தடுக்க உண்மை நிலையை வெளிப்படுத்துவது அவசியம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-7)

### அமெரிக்கா மீது

# தாக்குதல் நடத்தியது அல்கெய்டா இயக்கமே

### அல்ஜசீரா செய்தி

(வாஷிங்டன்).

அமெரிக்கா மீது தாக்குதல் மேற்கொண்டது ஒஸாமாபின் லேடனின் அல்கெய்டா இயக்கமேயாகுமென இருவரை ஆதாரம் காட்டி அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெமன் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட ரம்ஷியின் ஸைபா என்பவர் தாக்குதலுக்கான விமானத்தை செலுத்திய மொஹமட் அதாவின் உதவியாளர் ஆவார்.

அடுத்தவர் காலித்அல்ஷேக் மொஹமட் என்பவர் ஆவார். இவர்களிருவரும் அல்கெய்டா இயக்க ஆதரவாளர்களாவர்.

இவர்கள் இருவரும் கராச்சியில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு இடத்தில் வைத்து நேர் காணப்பட்டனர்.

அல்கெய்டா இயக்கமே அமெரிக்கத் தாக்குதலைத் திட்டமிட்டது. பின்னர், அது செயல் படுத்தப் பட்டது என அவர்கள் தெரிவித்துளளதாக அல்ஜசீரா செய்தி வெளியிட்டது. (உ)

# விநாயக சதுர்த்தியில் விரதமிருந்து வழிபட்டால் வெவ்வினைகள் அகல்வதுடன் வேட்கையும் தணியும்

**இன்று ஆவணி மாத சதுர்த்தி விரததினமாகும்**

எண்ணற்ற விரதங்களுள் முதன்மையானதும், எளிதில் அநேகநன்மைகளைக் கொடுக் கும் தன்மை வாய்ந்ததும், எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கக் கூடிய மிகவும் மேன்மை வாய்ந்தது மான ஒரு விரதம் விநாயக சதுர்த்தி ஆகும். அவ்விர தத்தை அனுஷ்டித்தால் சகல வித்தைகளும் சித்திகளும் கைகூடி வரும்.

எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் கணபதியை நினைத்து வேண் டிக் கொண்ட பிறகே அதைச் செய்யத் தொடங்க வேண் டும் என்பது பரம்பரை பரம் பரையாக நம்மிடையே நில விவரும் நம்பிக்கை.

*"நம்பிக்கைக்குத் தும் பிக்கையான் துணை"* என்பது வழக்கில் உள்ள ஒரு பழ மொழி.

### ஆவணிச் சதுர்த்தி

விநாயக சதுர்த்தி விர தம் மேலான விரதம். ஆவணி மாதம் பூர்வ பக்ஷத் தில் வரும சதுர்த்தி நாளில் முதன் முதலில் இவ்விர தத்தை அனுஷ்டிக்கத் தொடங் குதல் வேண்டும். அன்றி லிருந்து ஒவ்வொரு மாத மும் வரும் சதுர்த்தி விர தத்தை அனுஷ்டிப்பதே முறை. ஆவணி மாதம் சதுர்த்தி நாளில் அதிகாலை யில் எழுந்து நீராடி அர்ச் சனைக்குரிய பூக்களையும் மற்றும் அபிஷேகம், தூபம், தீபம் முதலிய பூஜைக்குரிய பொருள்களையும் சேகரித்துப் பரிசுத்தமான இடத்திலிருந்து விநாயக மூர்த்தியினுடைய திருவுருவத்தை அவரவர் தகுதிக்கேற்ப பொன், வெள்ளி, கல், மண், மஞ்சள்மா, சாணம் முதலியவற்றால் அமைத்துப் பூசை செய்து ஏகாட்சரம், பஞ் சாட்சரம் முதலான மந்திரங் களில் ஏதாவதொன்றைச் செபிக்க வேண்டும். பூசை முடி வில் அன்னதானம், பூதானம், சொர்ணதானம் முதலானவற் றைச் செய்ய வேண்டும். இவ் வாறு அடுத்த மாதம் சுக்கில பக்ஷத்து சதுர்த்தி வரையில் நாள்தோறும் முறைப்படி பூசை செய்து மேளதாளங்களோடு விநாயக மூர்த்தியை ஊர்வல மாக எடுத்துச் சென்று குளத் திலோ நதியிலோ விட்டுவிட வேண்டும். பூசைக்குரிய முப்பது நாட்களும் ஆகாரம், நித்திரை இன்றி இந்திரிய ஆசைகளை அடக்கி பகவத் விஷயங்களில் மனதை ஈடுபடுத்துதல் வேண்டும். இறுதி நாளில் விருந்தினர், அதிதிகள், பரதேசிகள் முதலா னோருக்கு அன்னம் வழங்கி அவர்களோடு இருந்து உண வருந்தி தானதருமம் செய்ய லாம்.



### அறுகு முக்கியம்

இவ்வாறு விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் சதுர்த்தி விரதத்திற்குரிய தினத்திலாவது ஆகாரம், இச்சை, நித்திரை முதலா னவற்றை விடுத்து விரதத்தை மேற்கொள்ள வேண்டும். விநாயக பூசையில் அறுகு இல்லாவிட்டால் அப்பூசை பலன்தராது. அறுகை நிறையத் திரட்டி அர்ச்சனை செய்யமு டியாதவர்கள் இருபத்தொரு அறுகுகளினாலாவது அர்ச் சிக்க வேண்டும். அறுகு ஒன்றுமட்டும் இருக்குமானால் போதும். அத்தகைய பூசைக்கு வெகு சுலபத்தில் விரும்பிய பலன் கிட்டும்.

விநாயகருக்குப் பிரிய மான வழிபாடு கைகளால் காதைப் பிடித்துக் கொள்வ தான தோப்புக் கரண மாகும். கஜமுகாசுரன் தேவர்களைத் தன் முன்னால் தோப்புக் கர ணம் போட்டு வணங்க வைத்தான். அந்த அசுரனின் ஆணவத்தை அடக்கியதால் ''தோப்புக் கரணம்'' போடும் வழக்கம் உண்டா யிற்று என்பர்.

தலையில் குட்டிக் கும் பிடுவதும் விநாயக வழி பாட்டின் முக்கிய அம்சமா கும். காக்கை உருவமெ டுத்து குறுமுனியின் கமண் டல நீரைக் கவிழ்த்த பின் வேதியச் சிறுவனாகத் தோன்றி நின்று சிரித்த விநாயகப் பெருமானை, ஆத்திரங்கொண்டு கைமுஷ்டி பிடித்து தலையில் குட்டுவதற்கு ஓடிய போது வேதியச் சிறுவன் விநாயகர் தான், என்பதை அறிந்ததும் குறுமுனி தன் தலையிலேயே குட்டிக் கொண்டாராம். அம்மரபே இன்றும் குட்டிக் கும்பிடுவதற்கு காரணம் என்பர்.

இடர் நீங்க சிதறு தேங் காய் அடிக்கும் மரபும் நம்மு டைய வழக்கில் நிலவி வருகிறது.

### சகல ஜீவர்களும் சேர்ந்த மூர்த்தி

விநாயக வழிபாட்டின் ஒவ்வொரு அம்சமும் ஒவ் வொரு மகத்தான வரலாற் றைக் கூறுவது. அவரது வாக னமான பெருச்சாளியோ ஊரும் பிராணி இனங்களின் விருத்தியில் மேம்பட்ட பிறவி. அதிலிருந்தே மிருக இனங்களெல்லாம் படிப் படியாகத் திருந்தி விருத்தி அடைந்திருக்கின்றன. ஈன்று பால் கொடுப்பவை தொடங்கி மனிதர் ஈறாக உள்ள சகல ஜீவர்களையும் ஒன்று சேர்த்து அமைந்த மூர்த் தியே விநாயகர்.

**பண்டிதை யோகா சோமசுந்தரம் காரைநகர்**

எனவே பிரணவ சொரு பியும், தத்துவ வித்தகனும் ஆகிய விநாயகரை வழிபட் டால் வெவ்வினைகள் தீரும். வேட்கை தணியும். விநாயக வழிபாட்டிற்குரிய சிறப்பான தினம் ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி தினம். அது சங்கடஹர சதுர்த்தி என்று சொல்லப்படும். அத்தினத் தில் விநாயகரை வழிபட்டு எல்லா நற் பயன்களையும் பெறுவோமாக.

*"விநாயகனே வெவ்வினையை*
*வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை*
*தணிவிப்பான்–விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும்*
*நாதனுமாந் தன்மையினாந்*
*கண்ணிற் பணிமின் கனிந்து"*

(11ஆம் திருமுறை)

## மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் பொலிஸார் ஒருவரினால் தாக் கப்பட்டுள்ளதாக யாழ்.மனிதவு ரிமை ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ராசரத்தினம் சருவேஸ்வரன் (வயது 26) என்ப வரே தாக்குதலுக்கு உள்ளான வராவார்.

(த-6)

## விபத்தில் மூவர் காயம

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் உழவு இயந் திரமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம டைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியள வில் சாவகச்சேரியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக் கிளில் பயணம் செய்தவர்களான நல்லூரைச் சேர்ந்த ரெ.பரமேஸ் வரன் (வயது 34) ப.அருந்ததி (வயது 27) ப.தவப்பிரியன்(வயது 5) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத் திய சாலையில் அனுமதிக் கப் பட்டுள்ளனர்.

(த்-6)

## 130 வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் வித்தியால யத்தின் 130 ஆவது ஆண்டு நிறைவு தின விழா நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் கே.வி குண சேகரம் தலை மையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆராதனை மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு தல், மாடிக்கட்டடம் திறத்தல், விஞ்ஞான கூடம் திறத்தல், அலுவ லகத் திறப்பு ஆகியன இடம் பெறவுள்ளன.

(த-5)


# கலாலயா பயிற்சியகம்

மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

* **கேக் ஐசிங்**
  (பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மென்ட் ஐசிங்,புறொஸ்றிங் ஐசிங், **FONDANT ICING** மற்றும் மாச்சீனி அலங்காரம்)
* **உணவு தயாரித்தல்**
  (கீழைத்தேச,மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம்வகைகள், சூப்வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவு அலங்கரிக்கும்முறை, மரக்கறி களைக் குடைந்து உருவங்கள். செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
* **உடை தயாரித்தல்**
  (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை வீரிப்பு,தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
* **பூவேலை**
  (ஸ்ரொக்கின நெற்,டிப் இன் மலர்கள், **PANCLAY** மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள்,மலர்ச் செண்டுகள் **BOUQUET** செய்தல்)
* **கைவேலை**
  (பேப்பர் அலங்காரம், **SOFT TOYS**, வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை,கம்பளி நூல் வேலை, றிபன் வேலை)
* **பப்றிக் வர்ணம்தீட்டுதல் (FABRIC PAINTING)**
  (கதிரை வீரிப்பு, தலையணை உறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும்.மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும்,பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கோலம் வகுப்புகள் நடை பெறும்.

* பயிற்சிக்காலம் 6 மாதம்
* பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்
* இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

*புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 16.09.2002

மேலும் விவரங்களுக்கு பி.ப.2.00 மணி வரை நேரில்

[C/4983]


சேவை செய்ய உள்ளூர் நிறுவனங்கள் காத்திருக்க

## சேவா லங்கா நிறுவனத்திடம் நியாப் திட்டம் கையளிக்கப்பட்டது ஏன்?

**அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வினா**

(தென்மராட்சி)

நியாப் திட்டத்தை அமுல் செய்யக்கூடிய உள்ளூர் நிறு வனங்கள் இங்கு தொழிற்பட் டுக்கொண்டு இருக்கையில் தற் பொழுது வியாபாரத்திற்காக இங்கு வந்துள்ள நிறுவனத் திற்கு எப்படித் திட்டம் கொடுக் கப்பட்டது என்பதைப் பொறுப் பான அதிகாரிகள் பொதுமக் களுக்கு பத்திரிகைகள் மூலம் விளக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ். மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் இணை யம் வெளியிட்டுள்ள அறிக் கையில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் 2000ஆம் ஆண்டு முதல் ''நியாப் திட் டம்'' அமுல்செய்யப்பட்டு வரு கின்றது. உலக வங்கியின் நிதி யுதவியோடு வடக்கு - கிழக்கு மாகாண சபை இத்திட்டத் தைப் பொறுப்பேற்றுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கும் இத்திட்டங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை கள், அழுத்தங்கள் கொடுக் கப்பட்டமையால் இங்கும் இத் திட்டத்தை அமுல் செய்ய உலக வங்கி தீர்மானித்தது. உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியைச் சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் சந்தித்து இத்திட்ட அமுலாக்கம்பற்றி விரிவாகக் கலந்துரையாடி னோம். உள்ளூர் அரச சார் பற்ற நிறுவனங்களை அமு லாக்கத்தில் பங்காளிகளாக்க வேண்டியதன் அவசியம் தெளி வாக விளங்கப்படுத்தப்பட்டது.

இதன் தொடர் நடவடிக்கை யாக கடந்த ஜனவரி மாதம் நியாப் திட்ட அதிகாரிகள் உள் ளூர் நிறுவனங்களை யாழ். செயலகத்திற்கு அழைத்துத் திட்டம் பற்றிக் கலந்துரையாடி னார்கள். ஒரு மாதத்திற்குள் அடுத்த கூட்டத்தைக் கூட்டிப் பங்காளித்துவ நிறுவனங்களைத் தெரிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது. ஆனால் இன்றுவரை அக் கூட்டம் நடைபெறவில்லை.

திட்டத்தை அபகரிப்பதற்கு கொழும்பிலுள்ள சில தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் அரசியல் பலத்தைப் பிரயோகித் தன. இதுபற்றிய தகவல்கள் வெளி வரத் தொடங்கின. எமது இணை யம் எதிர்ப்பைத் தெரிவித்து அழுத் தம் கொடுத்தமையினால் திட்ட அபகரிப்பை கடந்த ஜூன் மாதம் வரையும் தடுத்து நிறுத்த முடிந் தது. ஜூலை மாதம் இடம்பெற்ற திரை மறைவு நடவடிக்கைகளி னால் ஓகஸ்ட் மாதத்தில் ''சேவா இலங்கா மன்றம்'' திட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ். குடாநாட்டில் ''பொரு ளாதாரக் குடியேற்றம்'' என்ற கட்டுரையை கடந்த மே மாதம் பிரசுரித்திருந்தோம். அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் ஓர் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. கட்டுரையில் குறிப்பிட்டதுபோல் இதுவரை காலமும் யாழ். மக்க ளின் அவலங்கள் பற்றிக் கவலைகூடத் தெரிவிக்காதவர்கள் இப்போது சேவைசெய்ய வந்துள் ளோம் என்பதன் உள்நோக்கம் என்ன? என வினாவெழுப்பப் பட்டுள்ளது.

## 16, 17, 18-ல் அரசு - புலிகள் பேச்சு!

# கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தாய்லாந்து மும்முரம்!

(கொழும்பு)

**தாய்லாந்தில் சட்டாஹிப் கடற்படைத் தளத்தில் நடை பெறவுள்ள இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே யான பேச்சுக்களுக் கானஏற்பாடுகளை செய்வதில், பிரதமர் தக்சின் ஷின் வட்ராவின் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுள்ள.**

பாதுகாப்பு தேவைகளின் வழங்கல், போக்குவரத்து ஆகியவற்றைகவனிப்பதற்குதனித் தனியான செயலணிப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பாதுகாப்புப்பிரிவில் பொலிசாருடன், இராணுவமும், புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தூதுக்குழுக்களில் உள்ள பிரதிநிதிகள ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் பாதுகாப்பு வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

வெளிப்படையானவையும், இரகசியமானவையுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மிக உயர்வான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தாய்லாந்தின்வெளியுறவுஅமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர்களுக்காகவும் ஹோட்டல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் முதல்நாள் அங்குரார்ப்பணம் சீ. என்.என். தொலைக்காட்சியில் நேரடியாககாண்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, பேச்சுக்களின் பின்னர் புலிகளின்ஆலோசகர் கலாநிதிபாலசிங்கம்வன்னிக்கு வருவதற்கான ஏற்பாடுகளை நோர்வே தூதுக்குழுவினர் செய்து வருகின்றனர்.

முன்னர் போன்று மாலைதீவின் கடல் விமானத்தின் மூலமான பயணமாக வன்றி பாங்கொங்கிலிருந்து இந்தியாவின் கேரள விமான நிலையத்திற்கு வந்து பின்னர் அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலமாக கிளிநொச்சிக்கு வரும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதனைநோர்வேயின் எரிக் சொல்ஹேய்ம் பாங்கொங் சென்றுகவனித்து வருகிறார்.

இதேவேளை, இவற்றிற்குச் சற்றும் சம்பந்த மில்லாத வகையில்பட்டயாவில் பெரும் வங்கிக் கொள்ளையொன்று நடைபெற்றுள்ளது. பட்டயாவின் புறநகர் பகுதியிலேயே சட்டாஹிப் கடற்படைத் தளம் உள்ளது குறிப்பிடத் தக்கது. (உ)

## 15 கோடி செலவில் ஒரு இலட்சம் நாய்கள் வருடாந்தம் அழிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில்இருந்தும்வருடாந்தம் ஒரு இலட்சத்துக்கு அதிகமான கட்டாக்காலி நாய்கள் கொல்லப்படுவதாக மிருக சேமநல மற்றும் சமூக பாதுகாப் புக்கான அமைப்பு தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பி: தயாரட்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில்நேற்றுமுன்தினம் நடைபெற்றகருத்தரங் கொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விசர் நாய் கடியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இக்கட்டாக்காலி நாய்கள் ஒழிப்புத் திட்டத்துக்கு வருடாந்தம் 15, கோடி ரூபா ஒதுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## கொள்ளைக் கும்பல் களுத்துறையில் சிக்கியது

(கொழும்பு)

கொள்ளையில் ஈடுபட்டு வந்த 4 பேரை களுத்துறை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட சுமார்10 இலட்சம் ரூபாபெறுமதியான பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவர்கள் பல வீடுகள் உட்பட 15 க்கும்மேற்பட்டகடைகளை கொள்ளையிட்டுள்ளனர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக களுத்துறைப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

### ரி. என். என் தொ. கா. நிறுவனம்

## பேச்சுவார்த்தையை ஒளிபரப்ப விருப்பம்

(கொழும்பு)

இம் மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தாய்லந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்புவதற்கு அனுமதி கேட்டு ரி. என். என். தொலைக் காட்சி நிறுவனம் தாய்லாந்து அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தைகளின் போது நேரடியாகச் செய்திகள் சேகரிப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்கள்தாய்லாந்திற்குப் படையெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ம)

## மணவாளக் கோல விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழா நாளை நடைபெறவுள்ளது. (உ)

### ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க

## குறைகேள் அதிகாரியை நியமிக்க பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

பாடசாலைகளில் ஆசிரியர்களின் பிரச்சினைகள உட்பட கல்வி தொடர்பான ஏனைய பிரச்சினைகளுக்குதுரிதமாகத் தீர்வு காண்பதற்கு குறைகேள அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு பிரதமர் இணங்கியுள்ளதாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பரீட்சை ஆணையாளர் ஏ. எம். ஆர். பி அமரக்கோனை குறைகேள் அதிகாரியாக நியமிப்பதற்கு அமைச்சரவையில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு, ஓய்வூதியம் வழங்கல் மற்றும் பதவிஉயர்வு ஆகிய பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காண்பதற்கு குறைகேள்அதிகாரியின் நியமனம் பெரிதும் உதவும் என்று அமைச்சர் மேலும் கூறினார். (த)

## குடாநாட்டு கல்வி, சுகாதாரம் குறித்து உலகவங்கிக்குழு நேற்று ஆராய்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் கல்வி சுகாதாரம் மற்றும் மின்சக்தி தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் பணிமனையில் நேற்று உலகவங்கிக் குழுப் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்.

இக் குழுவில் சிரேஷ்ட சக்தி நிபுணர் மைக் கொங்குறேர டேவீஸ், கிராமிய சக்தி நிபுணர் றிம் றெக்பேக், உடைமைகள் முகாமைத்துவ நிபுணர் ஜெயந்த நாகேந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

குடாநாட்டில் மாற்றுச் சக்திகளின் தொழிற்பாடுகளை இயக்குவதற்கும் அதற்கான வளங்களையும் தேவையான இடங்களையும் பார்வையிடும் வகையில் இக் குழுவினர் இங்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதவி அரசாங்க அதிபர் திருமதி பி. எல். பத்தினியம்மா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதி உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. ராஜதுரை செயற்றிட்ட அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் மின்சாரசபை அதிகாரிகள் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

யாழ். போதனாவைத்தியசாலையில் வெளிநோயாளர் தொகை அதிகரித்து வருவதால் வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டட வசதி போதாமல்உள்ளமை,

தெல்லிப்பழை புற்று நோயாளர் வைத்தியசாலையில நிலவும் மின்சாரப்பிரச்சினை மற்றும் ஆளணிப்பற்றாக்குறை,

தீவுப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதிலஉள்ள நிதிப்பிரச்சினை,

பாடசாலைகள் பலவும் அழிக்கப்பட்டும் சேதமடைந்தும்உள்ளமை ஆகியனகுறித்து உலகவங்கிக்குழுப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ் விடயங்களை நேரடியாக அவதானித்து, குடாநாட்டில்உள்ள வளங்களைக் கொண்டே இவற்றைநிவர்த்தி செய்ய திட்டமிடவுள்ளதாகவும் இதுதொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுக்க விரைவில் மற்றோர் உலக வங்கிக்குழு யாழ். வரவுள்ளதாகவும் உலகவங்கிக்குழு பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ-77,6)

## உள்ளூராட்சித்தேர்தலில் விடுதலைப் புலிகள் போட்டியிட வேண்டும்

### எம் எல் ஏ.எம். ஹிஸ்புல்லா வேண்டுகோள்

(கொழும்பு)

இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் போட்டியிட வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் எம் எல்.ஏ எம். ஹிஸ்புல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவேஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதனால் சமாதான முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது தேர்தலை நடத்துவதனால்அரச அதிகாரிகளிடம் இருக்கும் அதிகாரங்கள் ஜனநாயக முறையில் மக்களைச் சென்றடையும்.

இந்தத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துஅரசியல் கட்சிகளும் போட்டியிட வேண்டும் என்றும் ஹிஸ்புல்லா மேலும்தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் அது சமாதான முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்திவரும் அதேவேளை ஏனைய தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனக் கோரிவருகின்றன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம்சித்தார்த்தன் தேர்தலை ஒத்திவைப்பதற்காக புதிய சட்டமூலம் ஒன்றுகொண்டுவரப்படுமாயின் அதனைதாம்எதிர்க்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். (த)

### படையினர் உத்தரவினால் மூடப்பட்ட

## ஹாட்லி, மெதடிஸ்த பாடசாலைகள் நேற்றுமுதல் மீண்டும் இயங்குகின்றன

### கண்காணிப்புக்குழு உறுப்பினர் மேற்பார்வை

(மந்திகை)

கடந்த 2 ஆம் திகதி பருத்தித்துறையில் மாணவர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து 524 வது படைத் தளபதியின் உத்தரவின்பேரில் மூடப்பட்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலைஆகியன நேற்று முதல் மீளத்திறக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா கடந்தவியாழனன்றுஇதற்கான அனுமதியைவழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏற்கனவே இணக்கம் காணப்பட்டவாறு இரு பாடசாலை மாணவர்களும் கல்லூரி வீதியால் யாழ். மாவட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினரின் மேற் பார்வையில் சென்றனர்.

யாழ்.மாவட்டகண்காணிப்புக்குழு உறுப்பினர் போல் எரிக் விஜேய் இராணுவ முன்னணி சோதனைச் சாவடியில் காலை 7.30 மணிமுதல்8 45 மணிவரை இப்பணியை மேற்கொண்டார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெனாண்டோவின்பணிப்பின் பேரில் இப்பாதையூடாக மாணவர்களை அழைத்துச் செல்ல பெற்றோர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டதுடன் மாணவர்கள்மற்றும் ஆசிரியர் அல்லாதோர் உட்செல்வதை உறுதிப்படுத்தும் பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க ஹாட்லிக் கல்லூரியில் 440 மாணவர்களும், மெடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் 180மாணவிகளும் மாத்திரமே சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இவர்கள் எவ்வித பாதுகாப்புக் கெடுபிடிகளுமின்றி பாடசாலை வளாகம் வரை சைக்கிளில் சென்றுவந்தனர். (உ-23)

குடிபுறங் காத்தோம்பிக்
குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்
குறள்

வலம்புரி

## கடத்தல் சேட்டை

கடந்த சில வாரங்களாக இளம் பெண்களைக் கடத்தும் முயற்சியில் இனங்காணப்படாத சிலர் ஈடுபடுவது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. ஹயஸ்வானில்ஓட்டோவில், வந்து பெண் கடத்தும் நாடகம் நடைபெறுவதாக சம்பவங்களை அறிந்தவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை பெண் கடத்தும் சம்பவம் புதியன வல்ல. தென்னிலங்கைதிக்கு இரையாகிப் போவதற்கும் பெண் கடத்தலே காரணம் என்பதைக் காவியங்கள் எடுத்துக்கூறுகின்றன.

தற்போது சங்கரத்தை, சுழிபுரம் ஆகிய இடங்களில் தனிமையில் நின்ற இளம் பெண்களை கடத்தும் முயற்சியில் ஹயஸ் வான் மற்றும் ஓட்டோக்களில் வந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் யாரென்பது இது வரை இனங்காணப்படவில்லையாயினும், தென்னிலங்கையிலிருந்து ஹயஸ் வான்களில் உல்லாசப்பயணத்தை மேற்கொண்டு வருபவர்களே இவ் விபரீதமான சேட்டையில் ஈடுபடுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதில் எந்தளவு தூரம் உண்மைத்தன்மை உண்டென்பது ஆராய்வுக்குரியதெனினும், தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற சிங்கள, முஸ்லிம் உல்லாசப்பயணிகள் யாழ்ப்பாணக் கலாசாரத்தை மதிக்கத் தவறுகின்றனர் என்ற உண்மையை மறுப்பதற்கும் இல்லை.

சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை-புரிந்துணர்வு-சமாதானம் நிலவவேண்டும் என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.

ஆனால் நாம் எந்த இடத்திற்குச் செல்கின்றோமோ அந்த இடத்திலுள்ள கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மதிக்கவும், அதை மீறாமல் நடக்கவும் தெரிந்திருப்பது மிகமிக அவசியம் எனினும் தென்னிலங்கையிலிருந்து யாழ் வருகின்ற சிலர் யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. ஆலயங்கள், பொதுஇடங்களிலிருந்து மது அருந்துவதும், கேளிக்கை செய்வதுமாக இருக்கின்றனர்.

இத்தகையநடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு பாதகமாக அமையுமென்பதை உரியவர்கள் உணர்வது அவசியம்.

# எரிச்சல் அடையும் பெருங்குடல் நோயுள்ளவர்
# உணவு முறையை மாற்றி ஓரளவு சுகம் பெறலாம்

## மருத்துவ விளக்கம்

டாக்டர்
**எம். கே. முருகானந்தன்**
எம். பி. பி. எஸ். (இலங்கை)

தினமும் பல தடவைகள் மலங் கழித்தல், முக்கியமாகக் காலை உணவு சாப்பிட்டு 5 10 நிமிடங்களில் வயிற்றில் வலியும் நாவும் ஏற்பட்டு மலம் வெளியேறுவது, வயிற்றில் வாய்வு இரைச்சல் சத்தம் மலம் இறுக்கமாக இல்லாமலும் சில வேளைகளில் சளி போல் போவதும் உடல் சோர்வாக இருப்பதும் எரிச்சல் படும் உணவுத் தொகுதிகளின் அறிகுறிகள் என நாம் விளங்கிக் கொள்ளலாம். அதாவது மற்றவர்களுக்கு எதுவும் செய்யாத உணவுப் பொருட்கள் கூட இத்தகையோரின் உணவுத் தொகுதியை உறுத்திச் சில வகையான நோய் அறிகுறிகளை ஏற்படுத்துகிறது எனக் கருதலாம். இதுமுக்கியமாகப் பெருங்குடல் சம்பந்தமான நோய் (IBS) ஆகும்.

### நோயின் தன்மை

இது மிகவும் பரவலான ஒரு நோயாகும். ஒரு சமூகத்தில் 20 சதவீதத்தினர் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கக் கூடும் என ஆய்வுகள் கூறுகின்றன. அறிகுறிகள் தொடர்ந்து நீடிப்பதாலும், அதே சமயம் நாளாந்த வாழ்க்கையை அதிகம் பாதிக்காததாலும் பெரும்பாலானவர்கள்மருத்துவ ஆலோசனை பெறுவது குறைவு. இது பரவலாகக் காணப்படுகின்ற நோய் என்ற போதும் மிகவும் குறைவாகவே விளங்கிக் கொள்ளப்பட்ட நோயாகவும் இருக்கிறது.

இந்நோய் உள்ளவர்களின் உணவுக் கால்வாய் ஊறுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாதது. இதனை ஒரு சிறு பரிசோதனை மூலம்நிறுவியும் உள்ளனர். ஒரு சிறு பலூனை குதத்திற்குள் வைத்துக் காற்றைச் செலுத்திய போது. இந்நோயுள்ளவர்களால் அந்த வலியைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அத்துடன் பலூனை ஊதியதால் ஏற்பட்ட வலி அந்த இடத்தில் மட்டும் கட்டுப்பட்டு நிற்காமல் வயிறு முழுவதும் பரவியும் காணப்பட்டது. ஆனால் இவர்கள் உடலின் ஏனைய பகுதிகளில் ஏற்படும் வலியைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் அல்லர் என்பதும் கவனிக்கத் தக்கது: இந்நோயுள்ளவர்களின் உணவுத் தொகுதி சிலவகை உணவுகள் மருந்துகள், உளவியல் தாக்கங்கள் போன்றவற்றுக்கு அதிதமாகச் செயற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. எரிச்சலடையும் குடல் நோய் இளவயதிலேயே 20 வயது முதல் 30 வயதுக்குள்ளேயே ஆரம்பித்து விடும் மேலை நாடுகளில் பெரும்பாலும் பெண்களே இந்நோயுடன் வைத்தியரை அணுகுகின்றனர். ஆனால் ஆசிய நாடுகளில் ஆண்களே பெரும்பாலும் வைத்தியரைநாடுகின்றனர்.

### அறிகுறிகள்

இந்த நோயின் முக்கிய அறிகுறிகள் (ஆரம்பத்தில்) மேலே குறிப்பிடப்பட்டவை தான். அதாவது உணவு உண்டபின் வயிற்றுவலி ஏற்படுவதும், மலம் வெளியேறியதும் வலி தணிவதும் தான் இதுபெரும்பாலும் காலையில் ஏற்பட்டாலும் எந்த வேளையிலும் ஏற்படலாம். வயிற்றில் வலி அடிவயிற்றின் இடது அல்லது வலது பக்கத்தில்ஏற்படுகிறது. வயிற்றைமுறுக்குவதுபோன்ற கடும்வலி சிலருக்கு ஏற்படும். ஆனால் மற்றவர்களுக்கு பரவலானகடுமையற்றவலிதோன்றலாம். வயிறு எரிவது, வயிறு ஊதுவது போன்ற அசௌகரியங்கள்வேறுசிலருக்குத்தோன்றுவதுண்டு வலி எத்தகையதாக இருந்தாலும்மலம்வெளியேறியதும் தணிவது தான் இதன் முக்கியகுணாம்சமாகும்.

மலம் பெரும்பாலும்இளக்கமாக வெளியேறக் கூடும். ஆனால் வேறு சிலருக்கு சில நாட்களில் இளக்கமாகவும், வேறு நாட்களில் இறுக்கமாகவும் வெளியேறுவது உண்டு. மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் அடக்க முடியாமல்இருப்பதும் வயிற்றில் பலத்த இரைச்சலை ஏற்படுத்துவதும், வாய்வுடன் வெடித்துக் கொண்டு வெளியேறுவதும் இன்னும் சிலரது அனுபவங்களாகும். இவற்றுக்குக் காரணம் குடல் வேகமாக வேலை செய்துவிறைப்படைவதேயாகும். இதை SPastic Colon என்பர், வயிற்றுஊதல் வயிற்றுப் பொருமல், வாய்வு ஆகியவை அதிகமாக இருப்பதால்இறுக்கமான ஆடைகளையும், இறுக்கமானஇடுப்புப்பட்டிகளையும் அணிவது இவர்களுக்குச் சிரமமாக இருக்கும்.

உணவுக் கால்வாயோடு சம்பந்தப்படாத வேறு சில அறிகுறிகளும் I B.S. நோயாளர்களுக்கு சிலவேளைகளில்இருப்பதுண்டு. உதாரணமாகஅடிக்கடி சிறு நீர் கழித்தல், மாதவிடாய்க்குத்து, உடல் உறவுச் சிக்கல்கள் போன்றன. உடல் உறவு கொள்வது சில பெண்களில் இந்நோயின் தீவிரத்தை அதிகரிக்கலாம் எனவும், மாதவிடாயின் போதும் தீவிரமாகலாம் எனவும் சில அண்மைய ஆய்வுகள் சொல்கின்றன: (Degestion- Sept 2000) இரவில் மலங்கழிக்க நேரிடாமல் இருப்பதும் எரிச்சல் அடையும் குடல் நோய்தான் எனஓரளவு உறுதிப்படுத்துகிறது. மலத்தோடு இரத்தம் வெளியேறாமை, காய்ச்சலின்மை, நோய் இளவயதிலேயே ஆரம்பித்து விட்டமை போன்ற குணங்கள் அவருக்கு வேறு ஆபத்தான நோய்கள் மறைந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்கின்றன.

### பரிசோதனைகள்

ஆய்வு கூடப் பரிசோதனைகள் பெருமளவில் நோயை இனங்காண உதவமாட்டா. ஆயினும் சில அடிப்படைப் பரிசோதனைகளைச் செய்து வேறு நோய்கள் காரணமல்ல என்பதைக் கண்டுகொள்ளலாம் இதுஒரு ஆபத்தான நோய் அல்லஎன்பதைப்புரிந்து கொள்ளுங்கள் புற்றுநோயாக இருக்குமோ அல்லது வேறு ஏதாவது ஆபத்தானநோயாக இருக்குமோ என்றபயமும் பதற்றமும் நோயை இன்னும் மோசமாக்கும். எனவே, ஒருநல்ல வைத்தியரிடம் காட்டி உங்களுக்கு உள்ளது IBS (Irritable bowel syndrome) தான் என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். எக்ஸ்ரே, பேரியம் பால் கொடுத்து எடுக்கப்படும் எக்ஸ்ரே, கொலொன்ஸ்கோப்பி எனப்படும் பெருங்குடல் முழுவதையும்சோதிக்கும் அகநோக்கிப் பரிசோதனை, தைரொயிட் சுரப்பி பரிசோதனை போன்றவையும் தேவைப்படலாம்.

### உணவு முறை மாற்றம்

சில உணவு முறை மாற்றங்கள் இந்நோயாளருக்குஉதவக் கூடும், லக்டோஸ், பிரக்ரோஸ், சுக்ரோஸ் போன்றவை சேர்ந்த உணவுகள் இவர்களுக்குச் சமிபாடடைவது குறைவாதலால் அவற்றைத்தவிர்ப்பதுநல்லது. உதாரணமாகச்சிலருக்குப் பாலும், பால் சார்ந்த உணவுகளையும் தவிர்ப்பதுநல்ல பலனைக் கொடுக்கக்கூடும். இதற்குக் காரணம் பாலில் லக்ரோஸ் (Lactose) இருப்பதே. பழங்களில் பிரக்ரோஸ் (Fructose) இருப்பதால் பழவகைகளையும் தவிர்ப்பது வேறுசிலருக்கு உதவக்கூடும். நார்ப்பொருள் அதிகமுள்ள உணவுவகைகளை உணவில் சேர்ப்பதும் நிச்சயம் உதவும். கீரைவகைகளிலும், காய்கறிவகைகளிலும் அதிக நார்ப்பொருள் இருக்கிறது. அவற்றைத் தினமும்உணவில் சேருங்கள். இப்படியான உணவு முறைமாற்றங்கள் நிறையச் சுகத்தைக் கொடுக்கும்.

### மருந்துகள்

மருந்துகளைப் பொறுத்தவரையில் இந்நோயை முற்றாகக் குணப்படுத்த முடியாது ஆயினும் நோயின் அறிகுறிகளைத் தணிப்பதற்கு வயிற்றோட்டத்தைத் தணிக்கும் மாத்திரைகள வயிற்று வலியைத் தணிக்கும் மாத்திரைகள் மற்றும் மனச் சோர்வு தணிக்கும் மாத்திரைகள் ஆகியன உதவும உங்களுடைய வைத்தியரின் ஆலோசனையுடன் உங்களுக்கு அவசியமானதை உட்கொள்ளுங்கள் நிச்சயம் குணம் கிடைக்கும். இது பெருமளவு மனம் சம்பந்தப்பட்ட நோயேயாகும், புற்றுநோய்கள்போன்ற ஆபத்தான நோய்கள் கிடையாது சத்திர சிகிச்சை தேவைப்படாது போன்ற நம்பிக்கைகள் உங்கள் நோயைக் குணமாக்கிவிடும், மன அடக்கப்பயிற்சிகள், தியானம் யோகாசனம் போன்றவையும்உதவக்கூடும். ●

---

## தினசரி தியானம்

### ஒழுக்கம்

ஆன்மீக வாழ்க்கைக்கு ஒழுக்கநெறிகள் அடிப்படையானவை. ஒழுக்க நெறிகள் இல்லாத தத்துவங்கள் உளறல்களே, மதம் அர்த்தமற்றதே ஒழுக்கம் இல்லாத வாழ்க்கைஇறப்புக்குச்சமமாகும் ஒழுக்கம்இல்லாப் பண்பு உப்பில்லாப்பண்டம் போன்றது நீதிமுறைகள் ஒழுக்கநெறிகளுடன் அல்லது ஆன்மீகத்துடன் இணைந்திருக்கின்றன. நாள்தோறும் புனித நீராடுதல், கோவிலுக்குச் செல்லுதல். இராமாயணம் அல்லது பகவத் கீதைபடித்தல் முதலியன ஒருவருடைய தனித்திறமைகளுக்கு உதவுகின்றன. ஆனால் நீங்கள் ஒழுக்க, நீதி நெறிகளின் அடிப்படைகளைக் கூட நிறைவேற்றவில்லை என்றால், மேலே கூறப்பட்டவை இறைவனை உணர்வதற்கு உதவமாட்டா. ஆகவே, ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுங்கள்.

சுவாமி சிவானந்தர்

---

## 794 ஆம் இலக்க பஸ்சேவையை ஆரம்பிக்குக

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கனகம் புளியடிச்சந்திஊடாக கொடிகாமத்துக்கு முன்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 794 பாதை இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி மட்டுவில், சரசாலைப் பகுதி பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இச் சேவை ஆரம்பிக்கப்படாமையினால் இப்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கும் ஏனைய இடங்களுக்கும்செல்வதற்கு நடந்து சென்றே நுணாவில் சந்தியில்பஸ் எடுக்கவேண்டிய நிலைஉள்ளது.

நுணாவில் சந்தியில் இருந்து கனகம்புளியடிச்சந்திவரையிலானவீதியின் இருமருங்கிலும் வளர்ந்துள்ளசெடி, கொடிகள் வெட்டித்துப்புரவு செய்யப்பட்டபின இவ்பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், இது வரை குறித்த சேவை ஆரம்பிக்கப்படாமை குறித்து இப்பகுதி மக்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். (உ-77)

## சர்வதேச அன்னையர் தினம்

சர்வதேச அன்னையர் தினம் எதிர் வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுவதை முன்னிட்டு நாட்டின் மகளிர் அமைப்புகள் பலவும் நிகழ்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக மகளிர் விவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)

# நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## பொலிஸ்-இராணுவதரப்பில் 60பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத் தலை நகர் காத் மண்டுவுக்கு 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றில் இருந்த பொலிஸ் நிலையம் மீது மாவோ தீவிரவாதிகள் மேற் கொண்ட முற்றுகைத் தாக்குதலில் 43 பொலிஸார், 14 இராணுவத்தினர் உட்பட 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு நூளையிரத்துக்கும் அதிகமான மாவோ தீவிரவாதிகள் பொலிஸ் நிலையம் மற்றும் அரச நிறுவனங்களை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தியதாக நேபாள அரசு தெரிவித்துள்ளது.

சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இந்த அதிரடித் தாக்குதலை அடுத்து உலங்கு வானூர்திகள் மூலம் மேலதிக படையினர் சம்பவ இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை தீவிரவாதிகள் மேற் கொண்ட மற்றுமொரு தாக்குதலில் 50றகும் அதிகமான பொலிஸார் உயிரிழந்துள்ளனர். (த)

### இடைக்கால....

கோஷங்களை எழுப்பியவாறு மூவின மக்களும் கொழும்பு மாநகர சபை மைதானத்தை வந்தடைந்தனர்.

மக்கள் எழுச்சிப் பேரணிக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து பேசுகையில்,

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்துவதற்கு விடுதலைப் புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆரம்பத்தில் ஆயுதம் தாங்கிய அமைப்பாக இருந்த விடுதலைப் புலிகள் இப் போது சமாதானத்தில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

இந் நிலையில் அரசியலில் ஈடுபடுவதற்குச் சில காலம் எடுக்கலாம். இடைக்கால நிர்வாக சபையைத் தம்மிடம் தருமாறு அவர்கள் கேட்டுள்ளார்கள். ஜனநாயக அரசியல் அனுபவத்தை அவர்கள் பெறுவதற்கு இடைக்கால நிர்வாக சபையை அவர்கள் பயன்படுத்த உள்ளார்கள்.

இந் நிலையில்விடுதலைப் புலிகள் சமாதானத்தை ஏற்படுத்த முன வந்துள்ளார்கள் எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட பிரதமர் ரணில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தான் நோர்வே அரசின் மத்தியஸ்தத்தை நாடினாரென்றும், இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த முன் வந்தார் என்றும் அதனையே நான் இப்போது செய்து வருகின்றேன் என்றும் கூறினார்.

இவ் எழுச்சிப் பேரணிக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி, மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன், அமைச்சர்கள் ஆறுமுகன் தொண்டமான், பந்துல குணவர்த்தன, கருஜெயசூரிய ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம)


இலக்க மாற்றம்

## யாழ் நகரில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலைய இயக்க ஆரம்பம்

2002 செப்ரெம்பர் 11 முதல் யாழ் நகரில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையமொன்று இயக்க ஆரம்பம் செய்யப்படுமென்பதை ஸ்ரீ லங்கா ரெலிகொம் பொது மக்களுக்கு அறிவிக்க விரும்புகிறது. இந்த இயக்க ஆரம்பத்துடன் யாழ் நகர் மற்றும் பருத்தித்துறை பரிவர்த்தனை நிலையங்களில் ஆரம்பித்து புதிய 10 இலக்க ஒழுங்கமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படும்.

2002 செப்ரெம்பர் 11 முதல் யாழ் நகர் மற்றும் பருத்தித்துறை தொலைபேசி இலக்கங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்படும். பிராந்தியக் குறியீட்டிலக்கமான 021 மாற்றம் பெறாது.

| பரிவர்த்தனை நிலையம் | தற்போதைய இலக்கம் | | புதிய இலக்கம் | |
|---|---|---|---|---|
| | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல (4 இலக்கங்கள்) | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல (7 இலக்கங்கள்) |
| யாழ் நகர் | 021 | 2XXX | 021 | 2222XXX |
| | 021 | 3XXX | 021 | 2223XXX |
| பருத்தித்துறை | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல (5 இலக்கங்கள்) | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல (7 இலக்கங்கள்) |
| | 021 | 63XXX | 021 | 2263XXX |

உதாரணம்:-

| யாழ்நகர் பிராந்தியம் | |
|---|---|
| தற்போதைய இலக்கம் | புதிய இலக்கம் |
| 2240 | 222 2240 |
| 3240 | 222 3240 |

| பருத்தித்துறை | |
|---|---|
| தற்போதைய இலக்கம் | புதிய இலக்கம் |
| 63240 | 226 3240 |

இலக்க மாற்றம் பற்றிய சகல விசாரணைகளும் யாழ். பிராந்திய ஸ்ரீ லங்கா ரெலிகொம் காரியாலய உத்தியோகத்தர்களால் 021 - 2222240/021 - 2222231 என்ற இலக்கங்களில் அல்லது கொழும்பு காரியாலய 161 என்னும் இலக்கத்தில் கவனிக்கப்படும் இந்த மாற்றங்கள் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை இட்டு ஸ்ரீ லங்கா ரெலிகொம் வருந்துகிறது. (C4984)

Sri Lanka Telecom
www.slt.lk


### வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிட்டு பீரங்கிப் படையின் சிறப்புத் தளபதி கேணல் ராஜுவின் வித்துடல் பேழை யாழ். இந்துக் கல்லூரியில் இன்று பி.ப 1 மணி முதல் பி.ப 2 மணி வரை பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் படவுள்ளது.

இவ் அஞ்சலி நிகழ்வில் சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் சேர்ந்த வர்த்தகர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் அதேவேளை வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையம் முன்பாக சிவப்பு, மஞ்கள் கொடிகளை கட்டுமாறும் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த-5)

### கேணல் ராஜுவின்...

சந்தையில் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் பி.ப 2.30 தொடக்கம் பி.ப 3.30 மணி வரையும், அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் பி.ப 4.00 மணி தொடக்கம் 4.30 மணி வரையும், நெல்லியடி கரும்புலி மில்லர் நினைவாலயத்தில் மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரையும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மாலை 6.30 மணி முதல் இரவு 7.00 மணி வரையும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் ஒவ்வொரு இடத்திலும் ஈகச் சுடர் ஏற்றல், அகவணக்கம், மலர்மாலை அணிவித்தல் அஞ்சலியுரை, கவிதாஞ்சலி ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் A9 பிரதான வீதியூடாக குடாநாட்டுக்கு எடுத்து வரப்படும் வித்துடல் பேழை கொடிகாமம் சாவகச்சேரி பிரதான வீதி ஊடாக யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவை வந்தடையும். அங்கிருந்து வேம்படிச் சந்தியூடாக சத்திரச்சந்தியை அடைந்து கே.கே.எஸ் வீதியை வந்தடையும். பின்னர் ஸ்ரான்லி வீதி கஸ்தூரியார் வீதியூடாக நினைவுப் பேழை எடுத்து வரப்பட்டு யாழ் இந்துக் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் கே.கே.எஸ் வீதியூடாக சுன்னாகத்தை சென்றடையும். அங்கிருந்து மீண்டும் கே.கே.எஸ் வீதியூடாக மருதனார் மடத்தை சென்றடைந்து மானிப்பாய் வீதியூடாக உரும்பிராய் சந்தியை வந்தடையும். பின்னர் அங்கிருந்து உரும்பிராய் வீதியூடாக கோப்பாயை வந்தடையும். அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை வீதியூடாக நெல்லியடியில் உள்ள கப்டன் கரும்புலி மில்லரின் நினைவாலயத்தில் அஞ்சலி இடம்பெறும். அங்கிருந்து இறுதியாக பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு வித்துடல் பேழை எடுத்துச் செல்லப்படும்.

இதனையடுத்து நாளை புதன் கிழமை வித்துடல் பேழை முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 4 மணியளவில் பூரண இராணுவ மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் இடம்பெறும். (த)

### பாராளுமன்ற...

இவ்வாறு அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் வண.உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில கருத்துக்கள் வெளியிடாமல் மௌனமாக இருப்பதற்காக பிரதமர் எனக்கு 50மில்லியன் ரூபா கொடுத்துள்ளதாக வித்தியோதய பிரிவேனாவைச் சேர்ந்த அக்குரட்டியே நந்த தேரர்பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் பொய்க்குற்றம் சாட்டியுள்ளார். (த)

### ஜனாதிபதியின்...

தெரிவித்திருக்கும் ஆலோசனையையும் திருத்தச் சட்ட மூலம் உள்ளடக்கியுள்ளது.

மேற்படி ஆலோசனை தவிர்ந்த வேறுஏதேனும் திருத்தங்கள் ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கப் பெறாத நிலையில் இத்திருத்தத்துடன் 19வது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படும் என்றும் அமைச்சர் சொக்சி தெரிவித்தார்.

வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படும் தினத்தில் இருந்து ஏழு நாட்களில் அது பற்றிய மேல் நீதிமன்றத்தின் முடிவுகளை அறிவதற்காக சமர்ப்பிக்கப்படும். இதே வேளை எம்.பிக்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்டமூலம் எதிர் வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (சு)

### தாய்லாந்தின்...

ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்கின்ற பத்திரிகையாளர்கள் காலை 7.30 மணிக்கு தமது கமராக்கள், வீடியோ படப்பிடிப்புக் கருவிகள் என்பவற்றை பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைத்து பரிசோதிக்கப்பட்ட பின்னர் 10 மணிக்கு ஆரம்ப வைபவமண்டபத்தில் தமது இருக்கைகளில் அமர்ந்து கொள்ள வேண்டும்.

ஆரம்ப நிகழ்வை அடுத்து அன்றைய தினம் பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணிவரை ஆரம்பக்கட்ட சமாதானப் பேச்சு வார்த்தையின் முதலாவது அமர்வு பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படாத நிலையில் பூட்டிய அறையினுள் நடைபெறவுள்ளது. புகைப்படப்பிடிப்பாளர்களும், வீடியோ படப்பிடிப்பாளர்களும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2வது நாளான 17ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை இரண்டாவது அமர்வும், பிற்பகல் 2மணி முதல் 5.30மணி வரை மூன்றாவது அமர்வும் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பேச்சுக்களில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு தாய்லாந்து அரசு இராப்போசன விருந்து அளித்து கௌரவிக்கவுள்ளது. 3வது நாளான 18ந் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல மதியம 12 மணிவரை 4வது அமர்வு இடம்பெறவுள்ளது.

4வது அமர்வைத் தொடர்ந்து முதற்கட்டப் பேச்சு வார்த்தை முடிவடைவதுடன் பிற்பகல் 2 மணியிலிருந்து 2.45 வரையிலான 45 நிமிடங்கள் பத்திரிகையாளர் மாநாடு நடைபெறும். இப் பத்திரிகையாளர் மாநாடு அம்பாஸடர் நகரிலுள்ள ஜோண்லிசன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் பத்திரிகையாளர்கள் ஆரம்ப நிகழ்வில் செய்தது போல் தமது புகைப்படக் கருவிகளை பாதுகாப்பு அதிகாரிகளின் சோதனைக்கு உட்படுத்திய பின் மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு பி.ப 1.30 மணிக்கு சென்று தமது ஆசனங்களில் அமர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 28 - 03 - 1937

விண்ணில் 22 - 08 - 2001

### அமரர் வேலுப்பிள்ளை - இரகுநாதன்

திதி :- 10.09.2002

ஓராண்டு ஓடி மறைகிறது, ஓராயிரம் நினைவுகள் அலைமோதுகிறது எமது
குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
அன்பால்பண்பால் வழிநடத்திய குலவிளக்கே!
உலகை விட்டு நீங்கள் பிரிந்தபோதும்
எங்கள் இதயத்தில் என்றும் வாழ்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

125/39, கண்ணாபுரம், யாழ்ப்பாணம்.

[C/4982]

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.